

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.6.2025) சென்னையில் நடைபெற்ற திரைப்பட தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணு அவர்களின் பேரன் ஏ.என்.ஆதித்யன் – டாக்டர் ப்ரிதா பாலாஜி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### ஆட்சிப் பொறுப்பேற்ற 1,491 நாட்களில்

# 3000 திருக்கோயில்களில் குடமுழுக்கு பெரு விழாக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுக்குப் பாராட்டு!

சென்னை, ஜூன் 7-

திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இதுவரை 3 ஆயிரம் திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தி பெரும் சாதனையை இந்து அறநிலையத்துறை படைத்துள்ளது. அதன் பொருட்டு அத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கழக ஆட்சி ஆன்மிகத்திற்கு எதிரானது. இவர்கள் ஆட்சியில் ஆன்மீகம் தழைத்தோங்காது என்று எண்ணியவர்களின் எண்ணத்தில் அடிவிழும் வகையில் கடந்த 1491நாட்களில் 3000 திருக்கோயில்களுக்கு குட முழுக்குகள் நடைபெற்றுள்ளதை பக்தர்கள் வெகுவாகப் பாராட்டுகின்றனர்.

இத்தகு அளப்பரும் சாதனை செய்து வரும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:-

**திராவிட மாடல் ஆட்சிப் பொறுப்பேற்று 1491 நாட்களில், தமிழ்நாட்டிலுள்ள 3000 திருக்கோயில்களில் குடமுழுக்குப் பெரு விழாக்கள்! எல்லோருக்கும் எல்லாம் எனும் நம் ஆட்சியை, பக்தர்கள் போற்றுகிறார்கள்! அற்பர்கள் கதறுகிறார்கள்! அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுக்கும் மற்றும் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறைக்கும் வாழ்த்துகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### கருமந்துறை அரசு உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி மாணவி

# ராஜேஸ்வரிக்கு சென்னை ஐ.ஐ.டி.யில் பயில வாய்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – கல்வியாளர்கள் பாராட்டு!

சென்னை, ஜூன் 7-

**கல்வராயன் மலை, கருமந்துறை அரசு உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி மாணவி ராஜேஸ்வரிக்கு சென்னை ஐ.ஐ.டி. யில் பயில இடம் கிடைத்துள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் மாணவியை பாராட்டியுள்ளனர்.**

சேலம் மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதி அருகே உள்ளது கருமந்துறை கிராமம். இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஆண்டி கவிதா தம்பதியினர்.

இவர்களுக்கு ஜெகதீஸ்வரி, ராஜேஸ்வரி, பரமேஸ்வரி மூன்று மகள்களும், ஸ்ரீ கணேஷ் என்ற ஒரு மகனும் உள்ளனர். டெய்லர் வேலை பார்த்து வந்த ஆண்டி தனது பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைத்து பெரிய ஆளாக்க வேண்டும் என்று கனவு கண்டுள்ளார். அதற்காக கடுமையாக உழைத்து வந்திருக்கிறார். ஆனால் கடந்த ஆண்டு உடல்நலக் குறைவு காரணமாக ஆண்டி உயிரிழக்க பட்டதாரியான அவரது மகன் ஸ்ரீ கணேஷ் தந்தை தொழிலான டெய்லர் வேலையைச் செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் கருமந்துறை அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் படித்து வந்த இளைய மகள் ராஜேஸ்வரி பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 438 மதிப்பெண்களும், பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 521 மதிப்பெண்களும் எடுத்து அசத்தியுள்ளார். பின்பு படிப்பை வைத்து வாழ்கையில் சாதித்து அப்பாவின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணிய ராஜேஸ்வரிக்கு பொறியியல் படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்துள்ளது. அதற்காக கடின உழைப்பைச் சிந்திய ராஜேஸ்வரி பெருந்துறையில் உள்ள அரசு பயிற்சி மையத்தில் சேர்ந்து படித்து ஜே.இ.இ. தேர்வு எழுதியுள்ளார். அதில் அகில இந்திய அளவில் 417வது இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் ராஜேஸ்வரிக்கு சென்னை ஐ.ஐ.டி.யில் பயிலுவதற்கு இடம் கிடைத்துள்ளது.

இந்த தொடர் உழைப்பின் பலனாக தமிழகத்தில் பழங்குடியினச் சமூகத்தில் இருந்து சென்னை ஐ.ஐ.டி.க்கு படிக்கச் செல்லும் முதல் பெண் என்ற பெருமையை ராஜேஸ்வரி பெற்று சாதனை படைத்துள்ளார்.

அவருக்கு பல தரப்பில் இருந்தும் பாராட்டுகளும் வாழ்த்துகளும் குவிந்த வண்ணம் உள்ளன.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

அரியலூர், பெரம்பலூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.06.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | அரியலூர் | ஹோட்டல் லயா இன், அரியலூர். |
| 09.06.2025 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பலூர் | ஜி.கே.ரெசிடன்சி, வெங்கடேசபுரம், பெரம்பலூர். |
| | காலை 11.00 மணி | நீலகிரி | பிரீத்தி கிளாசிக் டவர்ஸ், குன்னூர் சாலை, உதகை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–1–இல் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சோழிங்கநல்லூர் | கைலாஷ் கார்டன், பழைய மகாபலிபுரம் சாலை, சோழிங்கநல்லூர், சென்னை. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### நீதித்துறையின் மாண்பையும், சீரிய மரபையும் காத்து வந்தவர்!

# நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவு - சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜூன் 7-

**ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் மறைவு, சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் உளம் வருந்தினேன்.

நீதித்துறையின் மாண்பையும், சீரிய மரபையும் காத்துவந்தவர் என்பதுடன், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அருந்ததியருக்கு 3 விழுக்காடு உள்ஒதுக்கீடு கொண்டுவருவதற்கான பரிந்துரையை அளித்த குழுவின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவராக இருந்த போது, பிற்படுத்தப்பட்டோருக்கான தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான அறிக்கையினையும் தயாரித்து அளித்தவர் ஆவார்.

நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் மறைவு நீதித்துறைக்கு மட்டுமின்றி சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நீதித்துறை சார்ந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

### 'தூய்மை மிஷன்' திட்டம் விரைவில் விரிவுபடுத்தப்படும்

# தூய்மையான தமிழ்நாட்டை நாம் அனைவரும் உருவாக்குவோம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 7-

தூய்மை மிஷன் திட்டம் விரைவில் கிராமப் பகுதிகளிலும் விரிவுப்படு த்தப்படும் என்றும், தூய்மையான தமிழ்நாட்டை நாம் அனைவரும் உருவாக்கப் பாடுபட வேண்டும் என்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு வகையான கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்காக தனித்தனியாக சேகரிக்கும் பணி குறித்து காணொலி காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

தூய்மை தமிழ்நாடு சார்பில் முதற்கட்டமாக, சென்னை தலைமைச் செயலகம் உள்பட மாநிலம் முழுவதும் அரசு அலுவலகங்களை சுத்தம் செய்யும் வகையில் பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணு கழிவுகள், உலோகக் கழிவுகள், காகித கழிவுகள், கண்ணாடி கழிவுகள், பயன்படுத்த இயலாத மரத் தளவாடங்கள் போன்ற பல்வேறு வகையான கழிவுகளை சேகரிக்கும் மாபெரும் பணி மேற்கொள்ளப்பட்டது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.6.2025) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்களில், அரசு அலுவலகங்களில் பல்வேறு வகையான குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்காக தனித்தனியாக சேகரிக்கும் பணி குறித்து காணொலி காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு பின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சென்ற சட்டப்பேரவை கூட்டத்தொடரின் போது முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒட்டு மொத்த தமிழ்நாட்டையும் தூய்மையாக்க வேண்டும். குப்பை மேலாண்மை சரியாக செய்யவேண்டும் என்பதற்காக, தூய்மை மிஷன் என்ற திட்டத்தினை (புரா ஜக்டை) முதலமைச்சரின் உத்தரவின் பேரில் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் சார்பாக மானியக் கோரிக்கையில் அறிவித்தோம். இதற்காக முதலமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள்.

இதன் முதல்படியாக, இன்றைக்கு (World Environment Day) உலக சுற்றுச்சூழல் தினமான இன்று நம்முடைய மாநிலத்திலுள்ள 38 மாவட்டங்களிலுள்ள கிட்டத்தட்ட 1,100 அரசு அலுவலகங்களில் பல்வேறு வகையான குப்பைகளை கண்டறிந்து சேகரிக்கின்ற இந்த மாபெறும் திட்டத்தை இன்றைக்கு துவங்கி வைத்திருக்கிறோம். நேற்றும் இன்றைக்கும் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

38 மாவட்டங்களிலும் நடக்கக்கூடிய அனைத்து பணிகளையும் கண்காணிப்பதற்கும், அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவரிடமும் பேசுவதற்கும் மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தில் ஒரு கட்டளை மையம் (வார் ரூம்) உருவாக்கியிருக்கின்றோம்.

இதுவரைக்கும், சுமார் 300 டன் அளவுக்கு குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்த குப்பைகளை சட்டவிதிகளின்படி அப்புறப்படுத்துவதற்கு (Standard Operating Procedure) உரிய வழிகாட்டு நெறிமுறைகளும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு நாட்களில் இந்த திட்டம் எப்படி செயல்படுகிறது என்று பார்த்துவிட்டு, அடுத்தகட்டமாக, கிராம பஞ்சாயத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றிலும் இந்த திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கு இன்னும் 10 நாட்களில், அனைத்து அரசு அலுவலகங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனைத்தொடர்ந்து, இந்த திட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்குபெற்று தூய்மையான தமிழ்நாட்டை நாம் அனைவரும் சேர்ந்து உருவாக்குவோம் என்று இந்த திட்டத்தின் மூலமாக, அரசின் சார்பாக பொதுமக்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன் என்று துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பெருநகர மேயர் திருமதி.ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காஞ்சி மணிமொழியார்

ஜூன் 7 (1972)



சென்னை மாநகரத்தில் கழகம் வளர்ந்திட தொய்வின்றிப் பணியாற்றியவர்.

1937–38ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தவர்.

கழகத்தில் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர்.

1962ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவர்களில் முக்கியமானவர் இவர்.

"சின்ன உருவமும், சன்னமான குரலும், பொன்னான நெஞ்சும், மின்னும் விழிகளும் படைத்தவராய், துடிப்புமிகு நடையும், துவளாச் சுறுசுறுப்பும், தொண்டாற்றும் ஆர்வமும், தியாக மனப்பாங்கும் ஒருங்கே ஒருருவாய்த் திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களாலேயே புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.